★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 5630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

'உரிமை' கோருவோருக்கு சிறையில் இடமளிக்க!

பூனா, மே 31—

சம்யுக்த மராட்டிய சத்தியாக்கிரகிகளுக்குச் சிறையில் இடம் ஒதுக்குவதற்கென்றே மாநில முழுவதிலுமுள்ள சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்படுவதாகத் தெரிகிறதாம்!

எரவாடா மத்திய சிறையிலுள்ள சுமார் 300 கைதிகள் அவர்களின் தண்டனைக் காலம் முடியுமுன்னரே சென்ற இரண்டு நாட்களில் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனராம்.

மலர் 3] சென்னை: வைகாசி 20உ சனி (2—6—56) ★ ★ வெளியூர்: வைகாசி 21உ ஞாயிறு (3—6—56) [இதழ் 301

இரஷ்யாவில் மீண்டும் அரசியல் பூகம்பம்!

'அட, அசடே! காலுக்குப் பலம் வேண்டாமா?'



"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வட நாட்டைப்போல் தென்னாட்டிலும் அபிவிருத்திக்கு வகை செய்யப்படாததை, பார்லிமெண்டில், அங்கத்தினர்கள் சுட்டிக்காட்டினர்."

—அன்பளிப்பு : 'சுதேசமித்திரன்'

மாலடோவ் விலகினாரா? விலக்கப்பட்டாரா?

மார்ஷல் டிட்டோ மாஸ்கோ விஜயத்தின் எதிரொலி

மாஸ்கோ, ஜூன் 1—

இரஷ்யாவின் வெளிநாட்டு மந்திரியாக இருந்துவந்த வியாஷ்லாவ் மாலடோவ் பதவியைவிட்டு விலகிவிட்டார்.

அவருடைய இடத்திற்கு 'பிராவ்தா' இதழின் முன்னாள் ஆசிரியரான டிமிட்ரி ஷெப்லோவ் நியமிக்கப்பட்டு இருக்கிறார்.

யூகோஸ்லாவிய ஆட்சித் தலைவரான மார்ஷல் டிட்டோ அரசாங்கப் பொறுப்பில் மாஸ்கோ வரும் இந்த நேரத்தில், பதவியைவிட்டு மாலடோவ் விலகுவதால், பலவித யூகங்களுக்கு அது இடமளிக்கிறது.

மாலடோவ் வெளிநாட்டு மந்திரியாக இருப்பதுடன், துணைப் பிரதமராகவும் இருந்து வருகிறார்.

தாம் மேற்கொண்டு ஒழுகிய தவறான கம்யூனிஸ்டு தத்துவம் பற்றி அவர் வெளிப்படையாக வருத்தம் தெரிவித்துக் கொண்டதிலிருந்து, அவருடைய அரசியல் எதிர்காலம் குறித்து சந்தேகம் தெரிவிக்கப்பட்டு வந்திருக்கிறது.

சென்ற ஆண்டு பிப்ரவரியில் ஜார்ஜ் மாலென்கோவ் பதவியைத் துறந்த நேரத்தில், சோஷலிசத்தின் அடிக்கால் இரஷ்யாவில் நிர்மாணிக்கப்பட்டு இருக்கிறது என மாலடோவ் குறிப்பிட்டார்.

கம்யூனிஸ்டு கட்சி இதழான 'கம்யூனிஸ்டு'வில், 'தத்துவரீதியாகத் தவறுடையதும், அரசியல் துறையில் கேடு விளைவிப்பதும் ஆகும்' என, அக்கூற்று பற்றி எதிர்க்கப்பட்டிருந்தது.

அதுவுமின்றி, சோஷலிசம் ஏற்கனவே இருந்துவந்தது என எவ்வேறு குறிப்பிட்டிருந்தது.

நவம்பர் மாதத்தில் 'பிராவ்தா' இதழில், மாலடோவ் நடைமுறையைக் கண்டித்து ஒரு கட்டுரை ஷெப்லோவால் எழுதப்பட்டதிலிருந்து, அவருடைய பதவித் துறவு பற்றிய யூகம் கிளம்பிக் கொண்டு இருந்தது.

கோமின்பாரத்தைவிட்டு 1948-ல், யூகோஸ்லாவியா கம்யூனிஸ்டு கட்சியையும், மார்ஷல் டிட்டோவையும் விலக்கப்பட்ட அறிக்கையில் மாலடோவ்தான் கைச்சாத்து இட்டனர். எனவே, டிட்டோவுடன் இரஷ்யாவிற்கு ஏற்பட்டுள்ள புதிய உறவில் மேலும் நெருக்கம் ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே, மாலடோவ் பதவியைவிட்டு விலகுவதாக அல்லது விலக்கப்படுவதாக இருக்கக் கூடும் எனவும் நம்பப்படுகிறது.

தனது பதவித் துறப்புக்கு முன் தினம், மாஸ்கோவில் உள்ள பிரிட்டிஷ் தூதவர் அளித்த விருந்தில் கலந்துகொண்ட மாலடோவ் உற்சாகத்துடன் இருந்ததும், அரசாங்கப் பதவி விலகல் பற்றி மூச்சு விடாது இருந்ததும் பெரும் வியப்பாகக் கொள்ளப்படுகிறது.

விருந்தில் கலந்துகொண்ட பலரிடமும் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்த மாலடோவ், மறுநாள், தான் பதவி விலக இருப்பது பற்றி சாடையாகக்கூட குறிப்பிடாதது, அவ்வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்து இருக்கிறது.

'எகிப்தியப்புரட்சிவீரன்' நகீபிற்கு 10 ஆண்டு சிறை?

இரகசிய இராணுவ நீதிமன்றத் தீர்ப்பு?

லண்டன், ஜூன் 1—

'எகிப்தியப் புரட்சி வீரன்' என்று வர்ணிக்கப்படும் ஜெனரல் நகீபிற்கு இரகசிய இராணுவ நீதிமன்றம் ஒன்று, பத்து ஆண்டுகள் சிறைத் தண்டனை தரப்பட்டுள்ளதாம்!

இவ்வாறு, லண்டன், 'டெய்லி மெயில்' பத்திரிகையின் கெய்ரோ நிருபர் தெரிவித்திருக்கிறாராம்.

இந்தச் செய்தியை எகிப்திய சர்க்கார் அதிகாரிகள் எவரும் உறுதி செய்யவில்லை என்றும் அவர் கூறுகிறாராம்,

இராஜீய வரவேற்புகள் கெய்ரோவில் நடைபெறும்போது, தவறாது வருகை தந்துகொண்டிருந்த நகீப், கடந்த பல மாதங்களாக எந்த ஒரு மேற்கத்திய நாட்டுத் தூதவராலும் பார்க்கப்படவில்லையாம், அத்தகு வரவேற்புகளில்!

★

வீட்டிலேயே சிறை?

லண்டன், மே 31—

எகிப்திய மன்னன் பரூக்கிற்கு எதிராக பெரும் புரட்சி செய்து வெற்றிகண்ட ஜெனரல் முகம்மது நகீப், இப்போது கெய்ரோவில், வீட்டிலேயே சிறைவைக்கப்பட்டிருப்பதாக, வழக்கமாக நம்பகமான செய்திதரும் இராஜீயவாதிகள் கூறுகின்றனராம்!

இந்த செய்தியை இங்குள்ள எகிப்திய தூதுவராலயம் உறுதி செய்யவில்லை.

கடந்த 1954 நவம்பரில் பிரதமரான காமெல் அப்துல் நாசரால், எகிப்தியக் குடியரசுத் தலைவர் பதவியிலிருந்து நகீப் விரட்டப்பட்டது நினைவிலிருக்கலாம்.

தலைவர் ஆட்சி ரத்து!

கராச்சி, ஜூன் 2—

சென்ற சனியன்று கிழக்குப் பாகிஸ்தானில் அறிவிக்கப்பட்ட குடியரசுத் தலைவர் ஆட்சியை, குடியரசுத் தலைவர் இஸ்கந்தர் மிர்ஜா ரத்து செய்துவிட்டார் எனத் தெரிவருகிறது.

மே திங்கள் 31-ந்தேதி நிறைவேற்றப்பட வேண்டிய கிழக்குப் பாகிஸ்தான் வரவு-செலவுத் திட்டம் அமைச்சரவை பிரேரேபிக்க சபைத் தலைவர் அனுமதி மறுத்ததைத் தொடர்ந்து குடியரசுத் தலைவர் ஆட்சி அங்கு பிரகடனமாயிற்று.

ஐயோ! மதுவிலக்கே!

பாலகாட், மே 31—

'எசன்ஸ்' குடித்து ஆறுபேர் உள்ளூர் மருத்துவமனையில், இறந்து பட்டனர் என்று தெரியவருகிறது.

மதுவிலக்குக் காரணமாக, மதுவிற்குப் பதில், போதை தரும் பலவகை 'எசன்ஸ்'கள் இங்கு விற்கப்படுகின்றனவாம், தாராளமாக!

ஆந்திரா—சென்னை எல்லைத் தகராறு

கர்நூல், மே 29—

"ஆந்திரா—சென்னை எல்லைத் தகராறுகள் பற்றி நடைபெறும் நேரடிப் பேச்சுவார்த்தைகள் பலனளிக்கத் தவறிவிடினும், இரு மாநிலங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு எல்லைக் குழுவை நியமிப்பது கஷ்டமாயிராது" என்று, ஆந்திர முதலமைச்சர் பி. கோபால (ரெட்டி) பத்திரிகையாளரிடம் கூறினார்.

எல்லைத் தகராறுகள் நேரடிப் பேச்சு மூலமாகவோ அல்லது எல்லைக் குழுவின் மூலமாகவோ விரைவில் ஒரு இறுதி முடிவு காண வேண்டுமென்பது சென்னை அரசாங்கத்தின் நிலைமை.

****

மாபெரும் பொதுக்கூட்டம்

3—6—56 ஞாயிறு மாலை 6-மணிக்கு

திருவல்லிக்கேணி கடற்கரையில்

★

தி. மு. கழகப் பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள்

மாநில மாநாட்டின் முடிவுகள்

குறித்து விரிவுரையாற்றுவார்கள்.

—தி. மு. க. தலைமை நிலையம்

****

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 2-6-'56 சனி

ஏது நடைபெருதவை?

நாம் கோரும் திராவிட நாடு விடுதலைக்கும், இராஜகோபாலாச்சாரியாரும் அவர் திருக்கூட்டத்தாரும் கோரும் தட்சிணப் பிரதேசத்திற்கும் எந்த வகையிலும் பொருத்தம் கிடையாது.

தெற்கில் ஒரு பெரிய இராஜ்யத்தை நிறுவவேண்டும் என்பதே தட்சிணப் பிரதேசக் கோரிக்கையாகும்.

அவ்வாறு ஒரு பெரிய இராஜ்யத்தை அமைப்பதின் மூலம், வடக்கில் தென்னுட்டவர் செல்வாக்குப் பெறுவது சாத்தியமாகும் என்பது ஆச்சாரியாரின் வாதம்.

அப்பொழுதுதான் தென்னுட்டில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த முடியும் என அவர் நம்புகிருர் அல்லது நம்புவதுபோல் நடிக்கிருர்.

மொழி வழி மாகாண அமைப்பால் இந்தியத் துணைக்கண்டத்தின் ஒற்றுமை சீர்குலைந்துவிடும்; அத்தகைய சீர்குலைவை, இருமொழி, மும்மொழி மாகாணங்களை ஏற்படுத்துவதினுல் தடுத்துவிட முடியும்; அதற்காக தட்சிணப் பிரதேச அமைப்புக்கு முயலவேண்டும் என்பது காங்கிரஸ் மேலிடத்தாரின் முடிவு.

தெற்கின்மீது வடக்கு ஆதிக்கம் செலுத்துகிறது என்ற அச்சத்தின் காரணமாகவோ, தென்னுட்டவர் வடக்கின் கொட்டத்தை அடக்க வேண்டும் அல்லது வடக்கில் செல்வாக்குப் பெற்றுத் திகழ வேண்டும் என்ற அதிகார ஆசையினுலோ, தட்சிணப் பிரதேசம் அமைக்கப்பட வேண்டும் எனக் கோரப்படுவதுபோல், திராவிட நாடு கோரப்படவில்லை.

திராவிட நாடு—திராவிட இன மக்களின் விடுதலை முழக்கம். அது, திராவிடத்தின் பிறப்புரிமை.

திராவிடத்தை வடநாட்டு ஆட்சியுடன் இணைத்துவிட்டு, திராவிடத்தின் மீது வடநாடு ஆதிக்கம் செலுத்துகிறது என கதறுவதும், அதற்காக வடநாட்டை எதிர்த்து வாழ திராவிடம் ஒரு பெரிய இராஜ்யமாக உருவெடுக்க வேண்டும என வாதிடுவதும், அதற்காக தட்சிணப் பிரதேச அமைப்பு தேவைப்படுகிறது எனக்கோருவதும், அரசியல் கோமாளிதனமாகும்.

இந்தியத் துணைக்கண்டத்தின் ஏகத் தன்மையை ஐக்கியத்தை ஒப்புக்கொண்டும், மேலும் அதைக் கெட்டிப்படுத்த வேண்டும் என்றக் கருத்திலும் கோரப்படுவது தட்சிணப் பிரதேசம்.

ஆனுல், திராவிட நாடோ, அடிப்படையிலேயே இந்திய ஏகத் தன்மையையும், ஐக்கியத்தையும் ஏற்றுக்கொள்ள மறுப்பதின் எதிரொலியாகும்.

ஒன்ருக இணைந்திருந்து, வடக்கு—தெற்கு என, உள்ளுக்குள் ஒன்ருேடு ஒன்று அரசியல் ஆதிக்கம் பெற போரிட்டுக் கிடப்பதற்குக் கோரப்படுவது, தட்சிணப் பிரதேசம்!

துவக்கத்திலிருந்தே பிரிந்திருந்து, வடநாட்டு அரசுடன் நட்புறவுடனும் நெருக்கத்துடனும், சம நிலையில் வாழ்ந்து வர வேண்டும் என்ற விழுமிய நோக்கத்தின் விளைவு, திராவிட நாடு கோரிக்கை.

மொழிவழி அமைப்பு கூடாதென்பது தட்சிணப் பிரதேசத்தின் அடிப்படை.

மொழிவழி அமைப்பையே அடிப்படை இலட்சியமாகக் கொண்டு விளங்க வேண்டும் என்பதை மூலநோக்கமாகக் கொண்டிருப்பது திராவிட நாடு.

மொழிவழியில் அமையும் சிறிய இராஜ்யமாக இருந்தால் பொருளாதார முன்னேற்றத்தை அடைய முடியாது என எண்ணி, இரு மொழி, மும்மொழிப் பகுதிகளையும் ஒன்ருக இணைத்துக்கொண்டு பெரிய இராஜ்யமாக உருவாக வேண்டும் என்பது தட்சிணப் பிரதேசக் கோரிக்கை.

திராவிட மொழி இனப் பகுதிகள், தம்தம் மொழிவழியில் தனித்தனி இராஜ்யங்களாக அமைந்து, பிறகு அம்மொழி இனப் பகுதிகள் நான்கும் ஒன்ருக ஒரு கூட்டாட்சியில் இணைந்து, செயல்படுவது என்பது திராவிட நாடு கோரிக்கையின் உள்ளடக்கமாகும்.

இதுவரை குறிப்பிட்டு வந்தைக்கொண்டு, திராவிட நாடு கோரிக்கைக்கும், தட்சிணப் பிரதேச அமைப்புக் கோரிக்கைக்கும் எந்தவித ஒற்றுமையும் கிடையாது என்பதை ஒருவாறு வாசகர்கள் உணர்ந்து கொள்ளலாம்.

பரப்பளவில் சிறியது பெரியது என்ற பிரச்சினைக்கோ, வட இந்தியாவுடன் இணைந்திருப்பதும், இணைந்த நிலையிலேயே வட இந்தியாவின்மீது ஆதிக்கம் செலுத்த முயற்சி எடுப்பது என்ற உள்நோக்கத்திற்கோ, தட்சிணப் பிரதேச அமைப்புக் கோரிக்கையில் இடம் பெற்று இருப்பதுபோல், திராவிட நாடு கோரிக்கையில் இருப்பதற்கு அறவே இடம் கிடையாது.

இரண்டும், வெவ்வேறு அடிப்படையிலும், வெவ்வேறு அமைப்பு முறையிலும், வெவ்வேறு விளைவைக் கருதியும், முரண்பட்ட மனப்போக்குடன் கோரப்படுவதாகும். எனவே, நமது திராவிட நாடு கோரிக்கையை, தமது தட்சிணப் பிரதேச அமைப்புக் கருத்துடன் இணைத்துப் பேச ஆச்சாரியார் முன்வந்திருப்பது நகைப்புக்குரியதாகும்.

இரண்டும் ஒன்றுதான் என இணைத்துப் பேசுவதின் மூலமாகவாவது தமது தட்சிணப் பிரதேச முயற்சிக்கு மக்களின் ஆதரவு கிடைக்காதா என்ற நப்பாசையில் ஆச்சாரியார், அவ்வாறு இணைத்துப் பேசுகிருர் என்பதை நாம் அறியாமல் இல்லை.

அதுவுமின்றி, எவரைப் பழி வாங்கும் கருத்துடன் ஆச்சாரியார் தட்சிணப் பிரதேசம் கோருகிருர் என்ற உண்மையையும நாம் அறிந்தே இருக்கிருேம்.

அதேபோன்று, இருமொழி-மும்மொழி பெரிய இராஜ்ய அமைப்பால் எந்தப் பகுதி மக்களுடைய நல்வாழ்விற்கு வழி வகை செய்ய, ஆச்சாரியார் துடிதுடிக்கிருர் என்பதும் நாம் அறியாததல்ல.

திராவிட நாடு—சாத்தியமல்ல—நடைபெருதது — ஆச்சாரியார், தரும் சாபம் இது!

இப்படி கூறுகிறவர் தட்சிணப் பிரதேசம் உடனடியாக அமைந்துவிடும் எனக் கூறுகிருரா என்ருல், இல்லை—அதற்கும் நாள் வைக்கிருர்—அதுவும் உறுதியற்ற தன்மையில்! அதாவது, 'நாளை அல்லது மறு நாள்—அல்லது என்ருவது ஒரு நாள் தட்சிணப் பிரதேசம அமைந்தே தீரும்' என்கிருர் பரிதாபத்திற்குரிய ஆச்சாரியார்!

தட்சிணப் பிரதேசம் அமைவதில் அவர் கொண்டுள்ள ஆசையை, ஆழ்ந்த நமபிக்கையை திராவிட நாடு நிர்மாண விஷயத்தில் நாம் கொள்வதற்குநமக்கும் உரிமையுண்டு. ஆனுல், அவ்வாறு கொள்வதுகூட, ஆச்சாரியாருக்கு பிடிக்கவில்லை.

அந்த நச்சு நினைப்பின் காரணமாக, 'திராவிட நாடு—என்றும் நடைபெருத ஒன்று' எனத் தீர்க்கதரிசனம் கூறக் கிளமபிவிடுகிருர் ஆச்சாரியார்!

இத்தொடர்பில், ஆச்சாரியாருக்கு, ஒன்றை நினைவுறுத்த ஆசைப்படுகிருேம்.

பாகிஸ்தான் கோரிக்கை எழுப்பப்பட்ட நேரத்திலும், இதே ஆச்சாரியார், இதே போன்றுதான் தீர்க்கதரிசனம் கூறினுர். ஆனுல், இதே ஆச்சாரியார்தான, தமது தீர்க்கதரிசனத்தைக் குழி தோண்டிப் புதைக்க, கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு, பாகிஸ்தான் கோரிக்கை நியாயமானது-உடனடியாகக் கொடுபடவேண்டியது எனக் கூப்பாடு போட்டார்! 'பாகிஸ்தான் கொடு—கொடுத்து விடு-காலம் தாழ்த்தாதே!' என இதே ஆச்சாரியார்தான் கோபுரத்தின்மீது இருந்தும் முடிவில் முழக்கமிட்டார்!

அவரும், மேலும் சில ஆண்டுக் காலம், 'ஆண்டவன் அருளால்' உயிர் வாழ்ந்து இருப்பாரேயானுல், அவர் குழமப அல்லது மருளத்தக்க வகையில், திராவிட நாட்டை திராவிடப் பெருங்குடி மக்கள் பெற்றே தீருவதை, அவர் காண்பார். மக்கள் சக்திக்கு முன் ஏதேச்சாதிகாரிகள் இறுதியில் மண்டியிட்டு இருக்கின்றனர் என்ற வரலாற்று உண்மையை ஆச்சாரியார் அறியாதவரல்லவே!

சுற்றித் திரியும் சிறுவர்களுக்கு

அனுதை விடுதி!

போலிஸ் கமிஷனருக்கு சென்னை சர்க்கார் உத்தரவு

சென்னை, மே 31—

8 முதல் 16 வயதுள்ள அனுதைக் குழந்தைகளுக்கென ஒரு இல்லம் நடத்துவதற்கான திட்டத்திற்கு சென்னை சர்க்கார் ஒப்புதல தந்துள்ளனர்; ஆனுல், 300 குழந்தைகளுக்குமேல் கூடாதெனக் கட்டுப்படுத்தியுள்ளனர்.

சென்னை நகரில் சுற்றித் திரியும் சிறுவர் — சிறுமிகளைப் பிடித்து அவ்விடுதிக்கு அனுப்பி வைக்குமாறு போலீஸ் கமிஷனருக்கு சர்க்கார் உத்திரவிட்டுள்ளதாகத் தெரிகிறது.

1956—57-ம் ஆண்டிற்கு அந்த இல்லத்தை நடத்த ரூ 1,32,138 செலவாகும் எனத் தெரிகிறது.

துணி விலை ஏற்றம்: தடுக்க நடவடிக்கை

சர்க்கார் யோசிக்கிறதாம்

புதுடில்லி, மே 31—

'துணி விலை ஏறிக்கொண்டு செல்வதைத் தடுக்க மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றி சர்க்கார் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது' என்று, துணி விலை ஏற்றம் குறித்து, மாநிலங்கள் சபையில் தகவல் தெரிவிக்கப்பட்டபோது மந்திரி டி டி கிருஷ்ணமாச்சாரி தெரிவித்திருக்கிருர்.

இதற்கு முன்பு, தொழில் மந்திரியான நித்தியானந்த கனுங்கோ, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போது, துணி விலை ஏற்றத்திற்கான காரணம் கச்சாப் பருத்தியின் விலை ஏறியிருப்பதும், நாட்டில துணி தேவை அதிகரித்திருப்பதும் தான் என்றும் பதிலளித்திருக்கிருர்.

'ஆலை உற்பத்திக்கு வரம்பு நிர்ணயிக்கவேண்டும்; அம்பர் சர்க்காவைப் பெரும் அளவு புகுத்த வேண்டும் என்றும், கிளப்பப்பட்டுள்ள தகராறு, இந்த துணித் தட்டுப்பாட்டிற்கு எந்தவகையாலும் காரணமாக அமைந்துள்ளதா?' என்று கேட்கப்பட்டபோது, மந்திரி கிருஷ்ணமாச்சாரி, 'உறுப்பினருக்குத் தெளிவு ஏற்படச் செய்யும் நிலையில் சர்க்கார இல்லை,' என்று பதில் தந்திருக்கிருர்.

நெய்வேலித் திட்டம்

சர்க்காரின் இறுதி முடிவு பற்றி மத்திய அமைச்சர்

பெங்களூர், மே 31—

பல்வேறு துறைத்தொழில்களைத் துவக்குவதற்குத் துணை புரியக் கூடியதாக இருக்கும் நெய்வேலித் திட்டத்தைக் குறித்து இந்தியப் பேரரசினர் தனது இறுதி முடிவை ஜூலைத் திங்கள் முடிவில் தெரிவிக்கக்கூடுமென மத்திய உற்பத்தி அமைச்சர் கே. சி ரெட்டி தெரிவித்துள்ளார்.

"19 அல்லது 20 மிகப்பெரிய 'பம்பு'கள் தற்போது தண்ணீர இறைப்பு வேலையில் ஈடுபட்டிருக்கின்றன. நீரமட்டம் 260 அடியாகக் குறைக்கப்பட்டால்தான் நிலக்கரியை ஆபத்தேதுமின்றி வெளியே எடுக்கலாம்! ஆகவே, இன்னும் 9 அல்லது 10 குழாய்களைப் பொருத்த சர்க்கார் முடிவு செய்துள்ளது. இந்த எல்லா 'பம்பு'களும் ஜூன் திங்களில் வேலை செய்யத் துவக்கும்," என்றும் கே சி. ரெட்டி தெரிவித்திருக்கிருர்

ஆசிரியருக்குக் கடிதம்

காமராசர் கவனத்திற்கு!

"ஐயா,

'சுதேசமித்திரன்' வெளியூர் 29—5—56 இதழில், முதலமைச்சர் காமராசர் பேசியதாக வந்துள்ள செய்தியில், 'தி. மு. கழகத்தவர்கள், கோயிலில், காலில் செருப்பு அணிந்துகொண்டு சென்று கலாட்டா செய்தனர்' என்று காணப்பட்டது. அதைக் கண்டித்து, 'நம்நாடு' வெளியூர் 30—5—56 இதழ் தலையங்கத்திலும் எழுதியிருந்தீர்கள். ஆகவே, உண்மை நிகழ்ச்சியை அமைச்சர் அறிந்து, இனியாகிலும், தெரியாத செய்தியைப் பற்றி பொளி பேசமாட்டார் என்ற நமபிக்கையினுல் இதனை எழுத நேர்ந்தது

"கடந்த 18—5—56 காலை 10 மணியளவில், எங்கள் ஊரைச் சேர்ந்த தோழர்கள் பலரும், இயக்க நண்பர்கள் சிலரும் மொத்தம் ஐம்பது பேரவரை சீரங்கம் கோயிலுக்குச் சென்ருேம். கோயில் நுழைவு வாயிலில் இருந்த ஒருவர், 'செருப்பை இங்கே வைத்து விட்டுப்போங்கள்' என்ருர். எங்களில் சுமார் பதினைந்து பேர் செருப்பு அணிந்திருந்தார்கள்; அத்தனைபேரும் செருப்பை விட்டு விட்டுச் சென்ருேம்.

"பின்னர், கோயிலைப் பார்த்து விட்டுத் திரும்பி வரும்போது, உள்ளிருந்து இரண்டாவது கூடத்தில் உள்ள சிற்பக்கலையைக் கண்டோம்; அங்குள்ள சிலைகள் ஆபாசமான நிலையில் செதுக்கப்பட்டிருந்தன. அந்த இடத்தில் நம் தோழர்கள் தங்களுக்குள்ளாக சிலையைப் பற்றி பேசிக்கொண்டிருந்தனா. இதைக் கண்ணுற்ற பார்ப்பன பூசாரியொருவா, வேகமாக வெளியில் சென்ருர். அவர் போலீசில் புகார் செய்வாரென எண்ணினேம். விரைவில் இரண்டு போலீசார் வந்து எங்களைப் பார்த்துவிட்டு யாரையும் விசாரிக்காமல், ஏதும் செய்யாமல் திரும்பிவிட்டனர்.

"இதுதான் நடந்த நிகழ்ச்சியாகும். கழகத் தோழர்கள் எவ்வித அசம்பாவிதத்திலும் ஈடுபடவில்லை. அன்றே நாங்கள் மலைக்கோட்டை சென்ருேம்; அங்கும் கண்ணியத்துடனே நடந்துகொண்டோம்."

ஏ. இராமநாதன்,
கீழப்பாவூர்.

குறிப்பு:—இதைக் கண்ட பிறகாவது முதலமைச்சர் காமராசர் தி. மு கழகத் தோழர்கள் மீது பழி சுமத்திப் பேசுவதை நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று எடுத்துக்காட்ட விரும்புகிருேம். —(ஆ-ர்.)

'திரு-கொச்சி பிரதேசக் காங்கிரசை கலைக்க வேண்டும்'

போட்டி கோஷ்டித் தலைவர் கூறுகிருர்

திருவனந்தபுரம், மே 30—

திரு-கொச்சி பிரதேசக் காங்கிரசின் மீது ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளாகப்பட்டிருக்கிற போட்டி கோஷ்டியினர், சீக்கிரமே கூடி தங்களின் எதிர்காலம் குறித்து முடிவெடுப்பாராம்!

முன்னுள் பிரதேசக் காங்கிரஸ் தலைவரும், இந்தப்போட்டி கோஷ்டிக்குத் தலைவருமான சங்கு பிள்ளை என்பவர், தமது கோஷ்டி, பிரதேசக் காங்கிரசின் ஒழுங்கு நடவடிக்கைக்கு எதிராகக் காங்கிரஸ் மேலிடத்திற்கு 'அப்பீல்' செய்துகொள்ளப் போவதில்லை எனவும், புதிதாகக் கட்சி துவக்குவதோ, அல்லது வேறு கட்சிகளில் சேர்ந்து பணிபுரியப் போவதோ இல்லை என்றும் கூறியிருக்கிருர்.

தான் இன்றும்—என்றும் ஒரு காங்கிரஸ்காரர்தான் என்றும் அவர் கூறிவிட்டு, 'இப்போதைய திரு-கொச்சி பிரதேசக் காங்கிரஸ் கலைக்கப்பட்டு, நிர்வாகம் ஒரு 'அட் ஹாக்' கமிட்டியிடம் ஒப்படைக்கப்படவேண்டும்; புதிய கேரள மாநிலம் அமையும் இந்த நேரத்தில் அது அவசியம் என்றும் அவர் கூறியிருக்கிருர்.

தெரிந்துகொள்ளுங்கள்!

புதுடில்லி, மே 30—

இந்தியாவிலுள்ள இல்லங்களில், ஆண்டொன்றுக்கு 8 கோடி டன் மாட்டுச்சாண வறட்டி அடுப்பு எறிக்கும் எரிபொருளாக பயன் படுத்தப்படுகிறதாம்! 8 கோடி டன் வறட்டி, 4 கோடி டன் நிலக்கரிக்குச் சமமானது என்றும், 9 கோடி டன் நிலக்கரிக்கு $3\frac{1}{2}$ கோடி டன் விறகு சமமானதென்றும், ஆண்டொன்றுக்கு வீடுகளில் $3\frac{1}{2}$ கோடி டன் விறகு எரிபொருளாக உபயோகப்படுத்தப் படுகிறதென்றும் கூறப்படுகிறது.

'1945-ம் வருட நேருவே! 1956-ம் வருட நேருவுக்கு புத்தி புகட்ட வாராயோ?'

'திராவிட நாடு கோரிக்கை உணர்ச்சி வேகத்தில் எழுந்ததல்ல'

'பண்டித நேரு வலியுறுத்திய சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்டதே'

'பத்து ஆண்டுகளில் முன்னுக்குப் பின் முரண்படுவது ஏன்?'

'இந்திய அரசியலில் கொள்கைக் குழப்ப'வாதிகளுக்கு

சம்பத் தெளிவுரை

" இன்று நம்மை மிகக் கடுமையாகத் தாக்கிக்கொண்டிருக்கிற—நமது கொள்கைகளுக்கு நேர் எதிரிடையாகப் பயமுறுத்தல்களைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறவர் யார் என்று சொன்னால், பிரதமர் நேரு ஆவார். அவர் பதவிக்கு வந்தபின் —அந்தப் பதவி நிலைத்தபின, 'தன் ஆயுட்காலம்வரை தானே இந்த நாட்டு அரசியல் ஆதிபத்தியத்தில் அமர முடியும்; தனக்கு அடுத்தாற்போல் திரும்பிப்பார்த்தால் எறும்புக் கூட்டங்களும், கரையான் கூட்டங்களும்தான் இருக்கின்றன; வாழுகின்ற வரையில் நம்மை விட்டால் அவர்களுக்கு வேறு கதி இல்லை'—என்ற கருத்து அவர் உள்ளத்திலே ஊற ஊற, அவருடைய வாயிலிருந்து வெளிவந்த வார்த்தைகள் பயங்கரமாகவும்,1945-ல் இருந்த நேருவுடைய வார்த்தைகளுக்கு நேர் முரணானவையாகவும், 1945-ல் இந்திய அரசியலில் வீர நடை போட்டுக்கொண்டு வந்த நேருவின் ராஜதந்திரத்திற்கு முற்றிலும் முரணான வகையிலும் அவருடைய பேச்சுக்கள் உருவெடுத்திருக்கின்றன.

" ஆந்திர மாநிலம் வேண்டும்—என்ற கிளர்ச்சி நடைபெற்றபோது, பண்டித நேரு எவ்வளவு ஆணவமாகப் பேசினார்? 'முடியாது, முடியாது; யார் அவன்—ஆந்திர மாநிலம் கேட்பவன்? இந்த மக்கள்சபையில்கூட அப்படி யாரேனும் இருக்கிறார்களா' என்று முறைத்துப் பார்த்து, அதட்டி உட்கார வைத்துக்கொண்டிருந்தார்; அந்நிலையில், பொட்டி சீராமுலு உண்ணாவிரதம் தொடங்கிவிட்டார்; 'அவருடைய நிலை கவலைக்கிடமாயிருக்கிறது' என்ற செய்தி வருகிறது; என்றாலும் மக்கள் சபையில் பிரதமர் நேரு, வீர கர்ஜனை புரிந்தார்—'ஆயிரம் பொட்டி சீராமுலுக்கள் பிணமானாலும்—உயிர் துறந்தாலும், நான் என்னுடைய நிலையிலிருந்து பிறழ மாட்டேன்; தனி மாகாணம் வேண்டுமென்ற கருத்து காட்டுமிராண்டித்தனமானது'—என்று குறிப்பிட்டார்.

" ஆனால், பழைய பண்டித நேரு—1945-ல் இருந்த நேரு என்ன சொன்னார்? கம்யூனிஸ்டுக் கட்சியைவிட வேகமாக வாதாடினார்—'தனித் தனி மாகாணங்கள்வேண்டுமென்று மட்டுமல்ல; தனித்தனி மாநிலங்களாகப் பிரிக்கப்படுபவை தனி அரசாக வாழ வேண்டுமென்று விரும்பினாலும் வாழலாம்; அதைக் காங்கிரஸ் தடுக்காது—நானிருக்கிற வரையில் தடுக்கவிடமாட்டேன்'—என்று! அந்தப் பேச்சு எங்கே நிகழ்ந்தது என்பதை அறியும்போது இன்னமும் நமக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வரும்.

' காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் நிகழ்ந்தது, அந்தப் பேச்சு; அங்கே இருக்கிற—நமது அனுதாபத்திற்குரிய அரசியல் ஏமாளியான ஷேக் அப்துல்லா இருக்கிறாரே அவர், கூட்டம் ஒன்றில், நேருவுக்கு ஒரு விண்ணப்பத்தைப் படித்துக் காட்டினார்; என்ன அந்த விண்ணப்பம்? 'தனித்தனி தேசிய இனங்கள், தனித்தனி அரசை நிறுவிக் கொள்வதற்குக் காங்கிரஸ் ஆக்கமளிக்க வேண்டும்,'—என்றுதான் அவர் விண்ணப்பித்துக் கொண்டார்.

" அதைக் கேட்ட நேரு, சீறி எழுந்தார்; 'அளிக்கவேண்டும் என்று கோருவதிலேயிருந்து, நாங்கள் ஏதோ அதை மறுப்பதைப் போலல்லவா கேட்கிறீர்கள்? நாங்கள் அதற்காகவே இருக்கிறவர்கள்; தனி அரசு மட்டுமல்ல—அந்தத் தனியரசிலே வாழுகிற ஒரு 'குரூப்' கோஷ்டி, அது தனியரசு நிறுவிக் கொள்ளவேண்டும என்று விரும்பினாலும், அதில் நூற்றுக்கு நூறு நியாயம் இருக்கிறது,'—என்று பண்டித நேரு பேசினார்.

" அந்தப் பேச்சின் நான்கைந்து வாசகங்களை உங்களுக்கு நான் கூறுகிறேன்; ஏனென்றால், அவர்கள் ஏதோ பெரிய தத்துவங்களை வகுத்துக் கொண்டவர்களைப் போலவும், நாம் ஏதோ 'தத்துப் பித்து' என்று, உணர்ச்சி வேகத்தில் கேட்கக்கூடாதவைகளைக் கேட்டுக்கொண்டிருக்கும் 'தப்பிலி'களைப் போலவும் பல நண்பர்கள் எண்ணி, நம்மை ஏசிப் பேசுகிறார்கள். அவர்களுக்கு விளக்கம் தருவதற்காக, 1945-ம் ஆண்டில் வாழ்ந்த நேரு பேசியதை இங்கே எடுத்துரைக்கிறேன். நேரு பேசுகிறார், கேளுங்கள்—

"இந்தியாவிலிருந்து எவராவது பிரிந்து செல்ல விரும்பினால், 'வேண்டாம்' என்று காங்கிரஸ் அவர்களை வேண்டிக்கொள்ளும்; வேண்டிக் கொண்டதற்குப் பின்னும் 'பிரிந்துதான் செல்லுவோம்' என்று சொன்னால்! கண்ணியத்தோடு அதை அனுமதித்துவிடும்."

"இது பண்டித நேரு பேசியது—1945-ல் ஆகஸ்டு 2-ந்தேதி ஸ்ரீநகரில் பேசினார்.

"காங்கிரஸ் ஏற்கனவே தனித்தனி தேசிய இனங்களுடைய சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்டு விட்டது"—கோபத்தோடு இப்படிப் பேசினாராம், நேரு! ஏன்?

"ஷேக் அப்துல்லா, 'ஏற்றுக்கொள்ளவேண்டும் ஐயனே!' என்று, சந்தேகத்தோடு கேட்டார்; 'வேண்டுமென்ற கோரிக்கையில் சந்தேகம் தொனிக்கிறதே, சிஷ்யா! இந்த உரிமை வேண்டும் என்று நாம்தான் ஏற்கனவே தீர்மானித்து விட்டோம்! இன்னும் உனக்கு ஏன் சந்தேகம்,' என்று பண்டிதர் நினைத்துக் கூறியிருக்கிறார், அப்படி!

" முதல் முதல் சந்தேகப்பட்ட அப்துல்லா, மிகமிக புத்திசாலி! ஆனால், பண்டிதரது பதிலைக்கேட்டதும், சந்தேகத்தை நீக்கிக் கொண்ட ஷேக் அப்துல்லா, உலகத்திலே இருக்கிற 'விடுதலை விரும்பி'களின் நிரந்தர அனுதாபத்திற்குரிய ஷேக் அப்துல்லாவாக மாறிவிட்டார்! அதனால்தான் அவர், காலவரையின்றி, கம்பிகளை எண்ணிக் கொண்டிருக்கிறார் ஸ்ரீநகரத்துச் சிறைச்சாலையில்!

என்று, தோழர் ஈ. வெ கி. சம்பத் அவர்கள், திருச்சியில் நடைபெற்ற தி மு. கழக 2-வது மாநில மாநாட்டில், 'இந்திய அரசியலில் கொள்கைக் குழப்பங்கள்' என்ற தலைப்பில் பேசுகையில் விளக்கினார்.

[அவரது சொற்பொழிவின் மூன்று பகுதிகள் ஏற்கனவே தரப்பட்டுள்ளது மற்றொரு பகுதி இங்கு தரப்பட்டுள்ளது]

தொடர்ந்து தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பேசியதாவது :—

" ஷேக் அப்துல்லா துரோகம் செய்துவிட்டதைப்போல இவர்கள் சித்தரித்தார்கள்; ஆனால், ஷேக அப்துல்லா, ஸ்ரீநகரத்திலே தனக்களிக்கப்பட்ட வாக்குறுதியை—அன்றைய தினம் காங்கிரசின் தலைவராயிருந்த அபுல்கலாம் ஆசாத் தந்த வாக்குறுதியை நம்பித்தான், 'நான் பாகிஸ்தானிலும் சேரமாட்டேன்; இந்துஸ்தானிலும் சேரமாட்டேன்; தனிக் காஷ்மீராயிருப்பேன்; நான் தனி காஷ்மீராயிருப்பதை இந்துஸ்தான் ஏற்றுக்கொள்வதினாலே—இந்தியக் காங்கிரஸ் தலைவர்கள் ஏற்றுக் கோள்வதினாலே நான் அவர்களுக்கு நண்பன்; பாகிஸ்தானே! உனக்குப் பகைவன்,' என்று அவர், ஆயுதங்களைச் சேகரிக்காமலேயே இந்த ஆபத்தானவர்களுடன் கைகோர்த்துக்கொண்டு உலவினார்; சமயம் வந்தவுடனே, அவரைக் கழுத்தைப் பிடித்துச் சிறைச்சாலைக்குள்ளே தள்ளிவிட்டு, இவர்கள் காஷ்மீரை ஆக்கிரமித்துக்கொண்டு, 'துரோகி அப்துல்லாவை, போனால் போகிறது என்று உயிரை வாங்காமல, உயிரோடு விட்டிருக்கிறோம்,' என்று நீலிக்கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கிறார்கள்!

" பெரிய இந்தியாவில், ஏதாவது ஒரு குறிப்பிட்ட 'யூனிட்'—பிரதேசம இருந்துதான் தீர வேண்டும் என்று வற்புறுத்த மாட்டோம' என்று பேசிய 1945-வது வருடத்திய நேருவே! இதோ பார்—உன்னுடைய 'துரோகி' 1956-வது வருடத்திய நேரு, உன்னை மறுக்கிறார்!

" 'முடியாது முடியாது! யார் இந்தியாவிலிருந்து பிரிந்து செல்லவேண்டும் என்று கருதுகிறவர்கள்? பிளவு சக்திகளே! பிரிவினை மனங் கொண்டோரே! கொல்வேன்! விடமாட்டேன்! தெருவிலே குதித்து, உங்கள் குரல்வளையைக் கடித்துக் குருதியை உறிஞ்சுவேன்! முடியாது!'—என்று பேசுகிறார், 1956-வது வருடத்திய நேரு!

"'பிரிந்துவிட்ட - சுயநிர்ணய உரிமை பெற்ற ஒரு மாகாணத்திலே இருக்கிற ஒரு கோஷ்டி பிரிந்து போக வேண்டுமென்று சொன்னாலும், பிரிந்துதான் போகவேண்டுமென்று கர்ஜித்த நேருவே! இதோ! பம்பாயை மராட்டியர்கள் வேண்டுமென்று கேட்கிறார்கள்! 'மராட்டியர்களே பெரும் பகுதியினராக வாழும் பெருநகராம் பம்பாய் மராட்டியருக்கே வேண்டு'மென்ற கோரிக்கைக்கு, உமது பதில் என்ன?

"'முடியாது; டில்லியின் நேரடி ஆட்சியில்தான் இருக்கும,' என்பதுதானே!

"'யாரையா, அதை முடிவு செய்வது? பம்பாயிலே இருக்கிற மக்களா? டில்லியில் இருக்கிற நீரா?'—என்று மராட்டியர் கேட்கிறார்கள்! 'நான்தான்; நானேதான்!'—என்று பதில் சொல்லுகிறார், நேரு!

"'நேருவே! 1945-ம் வருடத்திய நேருவே! நீ உயிர் பெற்று வரமாட்டாயா?'—என்று நாங்கள் கோருகிறோம்.

"'மக்கள் உரிமையை மதிக்காமல், மதோன்மத்தரைப் போல், பழைய காலத்துக் காட்டுமிராண்டி இராஜாக்களைப் போல் ஆர்ப்பாட்டம் நடத்திக் கொண்டிருக்கிற இந்த 1956-ம் ஆண்டு நேருவுக்கு புத்தி புகட்ட, நீ உயிர் பெற்று வாராயா?'—என்றுதான் நாம் கேட்கிறோம்!

"'தேவிகுளம், பீர்மேடு பகுதிகளில் தமிழர்கள் வாழுகிறார்கள்; அவை தமிழகத்தோடு சேர்க்கப்பட வேண்டும்,' என்று நாம் கோருகிறோம்; 'தமிழர்கள் வாழுவதனாலேயே, அப்பகுதிகள் தமிழகத்துடன் சேராது; அங்கிருக்கிற தமிழர்கள் விரும்புவதனாலேயே அது தமிழகத்துடன் சேராது; நான் விரும்பினால் மட்டுமே அது எங்காவது சேரலாம்; அல்லது செத்து ஒழியலாம்,' என்று ஒருவர் பேசுகிறார்.

" 1945-ம் வருடத்திய நேருவே! நீ இறங்கிவந்து, அவருக்குப் பாடம் புகட்டாயா?'—என்று நமக்குக் கேட்கத் தோன்றுகிறது.

"எவ்வளவு அழுத்தம் திருத்தமாகப் பேசினார்? என்ன, இரோதாயுகத்திலா பேசினார்;—'முதல் அவதாரத்திலே பேசினார்; எட்டாவது அவதாரத்தில் அதை மறந்துவிட்டார்,'—என்பதற்கு! 1945-ல் பேசினார்! இடையில் பத்தே ஆண்டுகள்! அரசியல் வாழ்வில் அது கைசொடிப் பொழுது! இவரே அதற்குள் அதை மறந்து முரண்பட்டுப் பேசுகிறார் என்றால், ஏன்? நேருவின் உள்ளம் தெளிவற்ற நெஞ்சமா? இல்லை! தெளிவுள்ள நெஞ்சம் என்பதற்காகவே, இந்தியத் துணைக் கண்டத்துத் தலைமையை அவருக்குத் தாராளமாக அளித்தது, இந்திய அரசியல்! ஆகவே அவரது தெளிவற்ற தன்மையல்ல, இந்தக் குழப்பத்திற்குக் காரணம!"

[அவரது பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வரும்.]

ஆள்மாருட்டம் செய்து மோசடியில் ஈடுபட்ட வடநாட்டு அகதி

ரூ. 300 அபராதமும், ஒரு நாள் சிறைவாசமும் விதிக்கப்பட்டான்!

சென்னை, மே 30—

மேற்கு பாகிஸ்தானிலிருந்து ஓடிவந்து, அகதி என்ற பெயரோடு இங்கு சுகவாழ்வு தொடங்கியிருக்கும் ஒருவன், கள்ளக் கையெழுத்துப் போட்டு, பொய் தஸ்தாவேஜு தயாரித்து, ஆள்மாருட்டம் செய்து, மோசடியில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, நீதிமன்றம் கலையும்வரை ஒரு நாள் தண்டனையும், ரூ. 300 அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறான்.

கடந்த பிப்ரவரி, மார்ச் திங்கள்களில், மூன்று முறைகள் இந்த மோசடிக் குற்றம் புரிந்தானும், அவன்.

'டி. எஸ் பி. மணி என்பவர் நானேதான்' என்று ஆள்மாருட்டம் செய்து, அவரது கையெழுத்துப்போலவே பொய்க் கையெழுத்துப்போட்டு மத்திய தந்தி அலுவலகத்தில் கொடுத்து, டி. எஸ். பி. மணி லண்டனுக்கு அனுப்பிய தந்திகளின் கையொப்பமிட்ட நகல்களைத் தருமாறு கோரினான்.

தோழர் டி எஸ் பி. மணி தனக்கு பொருள் நஷ்டம் ஏதும் ஏற்பட்டுவிடவில்லை என்று கூறியிருப்பதாலும், குற்றஞ்சாட்டப்பட்டவர் தன்செயலுக்கு வருந்துவதாலும், இனி அம்மாதிரி நடந்துகொள்ளமாட்டார் என உறுதி கூறியிருப்பதாலும், அவர் தன்னைத் திருத்திக் கொள்ள ஒரு வாய்ப்புத்தரும் நோக்குடன், இந்தத் தண்டனை விதிக்கப்படுவதாகக் கூறி, பிரதம மாகாண நீதிபதி, மேற்கண்டவாறு தண்டனை விதித்திருக்கிறார்.

அமுலாக வேண்டுமே!

புதுடில்லி, மே 31—

'இந்திய இரயில்வேக்களில், ரஷ்ய இரயில்வேக்களிலிருக்கும் ஏற்பாடுபோன்று, ஊக்க முடம், 'போனசு'களும் அளிக்கும் முறையை ஏற்படுத்தலாம்' என்று மக்கள்சபை மதிப்பீட்டுக் குழு யோசனை தெரிவித்துள்ளதாம்.

சுரங்கத்தில் 13 மகளிர் பரிதாப மரணம்

கயா, மே 31—

கயா நகருக்குச் சமீபத்திலுள்ள பெய்க் என்ற கிராமத்திலுள்ள வெள்ளைக் களிமண் சுரங்கத்தில், மழையினால் மண் சரிந்து விழுந்ததால், அதில் பணியாற்றிக்கொண்டிருந்த 13 பெண்களும் புதையுண்டு விட்டனராம். கடந்த சனியன்று நடைபெற்ற இந்தப் பரிதாபகரமான சம்பவத்தில், கிராமவாசிகள் எவ்வளவோ முயன்றும் அப்பெண்களை மீட்க முடியவில்லையாம்.

20 இலட்சம் கைத்தறிகள் இருக்கின்றனவாம்!

இந்தியாவில் மொத்தம் சுமார் 20 இலட்சம் கைத்தறிகள் இருக்கின்றன என்றும், 1955-ம் ஆண்டில் மொத்தம் சுமார் 145 கோடி கெசம் கைத்தறித் துணி உற்பத்தியாயிற்றென்றும், இராஜ்யங்கள் சபையில், தொழிலியல் மந்திரி தெரிவித்தார்.

இனி இடைத் தேர்தல் நடைபெறாது

புதுடில்லி, மே 31—

1957 முதல் மூன்று மாதங்களில் பொதுத் தேர்தல் நடைபெற விருப்பதால், அக்கால எல்லைக்குள் இடைத்தேர்தல் நடத்துவது காலமும் பணமும்தானே பாழாகிறது; ஆகவே, ஆந்திரா மாநில சட்டசபைக்குத் தவிர, இப்போதுள்ள மக்கள் சபைக்கோ, அல்லது மாநில சட்டசபைகளுக்கோ இடைத் தேர்தல் நடத்த வேண்டாமென தேர்தல்கமிஷன் முடிவு செய்துள்ளது.

'பம்பாய் உடனடியாக மராட்டியத்துடன் இணைந்தாக வேண்டும்'

'வேறு எந்தவிதமான பரிகாரமும் நாம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல'

மராட்டியர் மாநாட்டில் டாக்டர் நரவனே முழக்கம்

பம்பாய், ஜூன் 1—

சம்யுக்த மராட்டிய காங்கிரசார் மாநாட்டின் தலைவரான டி. ஆர். நரவனே, 'பம்பாய் பிரச்சினைக்கு, மத்திய சர்க்காரின் சட்டத்துறை அமைச்சர் படாஸ்கர் கூறியுள்ள பரிகாரம் ஏற்றுக் கொள்ளத் தக்கது அல்ல; மேலும் அவரது கருத்து, மராட்டியரைப் புண்படுத்துவதாக உள்ளது' என்று கூறியிருக்கிறார்.

சுமார் 50,000 பேர் கலந்து கொண்ட சம்யுக்த மராட்டிய மாநாடு ஒன்றில் தலைமை வகித்துப் பேசுகையில்தான் அவர் அவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

'இரண்டு ஆண்டுகளுக்குப் பம்பாய் மத்திய சர்க்காரின் நேரடி நிர்வாகத்தின்கீழ் இருக்க வேண்டும்; அந்தக் காலத்தில், புதிய மராட்டிய மாநில சர்க்காரின் சில அலுவலகங்கள் பம்பாய் நகரிலேயே இருப்பதற்கு அனுமதிக்கப்படும். மக்கள் சபை வேறுவகையாகத் தீர்மானித்தாலன்றி, அந்த இரண்டாண்டுகளுக்குப் பிறகு, பம்பாய் மராட்டியத்துடன் இணையும்'

என்பதுதான் படாஸ்கர் கூறிய பரிகாரம்!

இதனை, தான் ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்று டாக்டர் நரவனே கூறியிருக்கிறார்.

"இந்த இரண்டாண்டுக் காலத்தில், பம்பாய் தொடர்ந்து டில்லி ஆட்சியின் கீழேயேஇருக்கவேண்டுமென்பதற்குச் சாதகமாக மக்கள் கருத்தை உருவாக்கிவிட நினைக்கிறார் போலும், படாஸ்கர்!" என்று நரவனே குறிப்பிட்டிருக்கிறார்.

"இரண்டாண்டுகளுக்குக் கூடத்தான், எதற்காகப் பம்பாய் டில்லியின் ஆட்சியில் இருக்க வேண்டும்? ஏன் பம்பாய் மக்கள் இரண்டாண்டு காலத்திற்கு தங்கள் ஜனநாயக உரிமைகளை இழந்து நிற்க வேண்டும்?" என்றும் நரவனே கேட்டிருக்கிறார்.

"பண்டித நேருவுக்காக, நாம் ஒரு திட்டத்தைத் தரமுடியும்; பம்பாய் உடனடியாக—இப்போதே மராட்டியத்துடன் இணைக்கப்பட்டுவிட வேண்டும; வேண்டுமானால், டெல்லி சர்க்கார், 'நகரம் சரியாக நிர்வகிக்கப்படுகிறதா?' என்று கண்காணித்துக் கொள்ளட்டும். இதுதான் நாம் ஏற்றுக் கொள்ளக்கூடிய திட்டம்.

"பம்பாய் உடனடியாக மராட்டியத்துடன் இணைக்கப்படாத எந்த ஒரு பரிகாரத்தையும், மராட்டியர் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை,"

என்றும் உறுதியாகத் தெரிவித்திருக்கிறார் நரவனே!

*-****-************-*

மதுரையில் அண்ணா

★

3—6—56 மாலை 6-30 மணியளவில், திலகர் திடலில், தி.மு. கழகச் சார்பில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

*-****************-*

திருமணம்

4—6—56 காலை 9-மணியளவில், திருச்சி—தி. கோ. சங்கரம்பிள்ளை ரோடு, கருணாநிதி பார்க்கில், தோழர் பொன்னுரங்கம்—தோழியர் இராஜலட்சுமி திருமணம், அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெறும்.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களும் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

4—6—56 காலை 9 மணியளவில், சென்னை-எழும்பூர் வானல்ஸ் ரோட், 7-ம் எண் இல்லத்தில், தோழர் பி. சி. சாமி—தோழியர் து. சிவபூசனம் திருமணம் தோழர் இளம்பரிதி தலைமையில் நடைபெறும். தோழர்கள் அ. இராவணன், மு. கன்னியப்பன் வாழ்த்துரை வழங்குவர்.

பொதுக்கூட்டம்

★

குடந்தை
சக்கரபாணிகோயில் தேரடிசமீபம்
3—6—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: கே. கே. நீலமேகம்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
சு. பத்மநாபன்
எஸ். ஆர். இராதா

★

நல்லூர்
மந்தக்கரையில்
5—6—56 மாலை 5-30 மணிக்கு
தலைவர்: என். கிட்டப்பா
பேசுவோர்:
சத்தியவாணிமுத்து
கே. எஸ். சௌந்தரராசன்

திருக்குறள் சொற்பொழிவு

3—6—56 காலை 10 மணிக்கு, வண்ணையம்பதி தனலட்சுமி உயர்தர ஆரம்பப் பள்ளியில் வித்வான் ஆர். இராம-சுப்பிரமணியம் அவர்கள், திருக்குறளில் 'நீத்தார் பெருமை' என்னும் அதிகாரத்தைக் குறித்துச் சொற்பொழிவாற்றுவார்.

திருவள்ளுவர் முன்னணிக் கழகம்

சென்னை, தொருக்கையம்பதி, எண். 15, நாகப்பன்நாயக்கன் தெருவிலுள்ள கழகப் பணிமனையில், 3—6—56 காலை 9 மணிக்கு, தோழர் சீனி. புருசோத்தமன் தலைமையில் 'உலகைத் திருத்திய உத்தமர்கள்' என்ற தலைப்பில், கழகத் தோழர்களும், மன்றத் தோழர்களும் பேசுவர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

3—6—56 காலை 9 மணியளவில், சென்னை—புளியந்தோப்பு தி. மு. கழகப் பணிமனையில் தோழர் சா. கோ. நாராயணசாமி தலைமையில் மாதாந்திர சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்; 'பொருளாதாரம்' என்ற தலைப்பில், தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

3—6—56 பிற்பகல் 3 மணியளவில், சென்னை—வண்ணையம்பதி இளங்கோ கலை மன்றத்தில், திரு. ப. மோகனவேல் தலைமையில் 'இளங்கோவும் புத்தரும்' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

இராயபுரம் இலக்கிய மன்றம்

3-6-56 காலை 9-30 மணியளவில், பனைமரத்தொட்டி சிவ. சுப்பிரமணியசுவாமி கோவில் மண்டபத்தில், திரு. கு. பெ. துரைசாமி தலைமையில், திரு. ஐ மாயாண்டி பாரதி 'புத்தமா? யுத்தமா?' என்ற தலைப்பில் விரிவுரையாற்றுவார்.

விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு துணிகள் அன்பளிப்பு

திருச்சி கழகத் தோழர்கள் ஆக்கப் பணி

திருச்சி, ஜூன் 1—

திருச்சியில் மூண்ட தீயின் விளைவால் நிற்க நிழலின்றி—உடுத்த உடையின்றி தவித்தோர் ஏராளம்! விபத்தினால் பாதிக்கப்பட்டு பொருட் சேதங்களுக்காளாகி, உடுத்த உடையுமின்றி நிராதரவாய் நின்றிட்ட தாய்மார்களின் பரிதாப நிலையினைப் போக்க, திருச்சி பெரிய கடைவீதி துணி வியாபாரி திரு. எஸ் டி. எஆர். அருணசலம் (செட்டியார்) அவர்களால் அன்பளிப்பாகத் தரப்பட்ட சுமார் ரூ. 200 பெறுமானமுள்ள சேலைகளைப்பெற்று திருச்சி நகர தி. மு. கழகத் துணைச்செயலாளர் ச. அருணகிரி, தோழர்கள் கே. சண்முகம், டி. வி. பரமசிவம் ஆகியோர் பாதிக்கப்பட்ட பகுதிகளின் வீதிகள்தோறும் சென்று சேலைகளைத் தாய்மார்களுக்குத் தந்து ஆறுதல் அளித்தனர்.

ஜனாதிபதி ஆட்சியின் நேரடி பலன்?

இந்தித் திணிப்பிற்கு ரூ. 2 இலட்சம்

திரு—கொச்சியில் 450 இந்தி ஆசிரியர்கள் நியமனம்

திருவனந்தபுரம், ஜூன் 1—

சர்க்கார், மற்றும் தனிப்பட்டோர் பள்ளிகளில் 450 இந்தி ஆசிரியர்களை நியமித்துக்கொள்ளுவதற்கு மாநில சர்க்கார் அனுமதி அளித்திருக்கின்றனராம்.

மேலும், சர்க்கார் பள்ளிகளில் 120 இந்தி ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பது எனவும் முடிவு செய்யப் பட்டிருக்கிறதாம்.

இவர்கள் இரு பிரிவுகளாகப் பயிற்றுவிக்கப்படுவார்களாம்.

இந்த இந்தித் திணிப்புத் திட்டங்களுக்காக ரூ. 1,73,000-வரை இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்.

'ஜனாதிபதி ஆட்சியின் நேரடிப் பலன் இதுதானோ?' என்று கேட்கின்றனர், திரு-கொச்சி மக்கள்!

ஊழியர் மறைவு

காஞ்சிபுரம் தோழர் கே. பக்தவத்சலு அவர்கள், சிறந்த கம்யூனிஸ்டு கட்சி ஊழியர் ஆவார். பல முன்னேற்றக் கழகத் தோழர்களின் நெருங்கிய நண்பருமாவார். அவர் வேலூர் மருத்துவ மனையில் சிலநாள் சிகிச்சை பெற்று வந்து, 31—5—56 மாலை 4 மணிக்கு எதிர்பாரா வகையில் உயிர்நீத்தார் என அறிவிக்கப்படுகிறது. அவர் பிரிவு என்னைப் பெரிதும் வருத்துகிறது.

அவருடைய பொதுவாழ்வு அனைவராலும் பின்பற்றத் தக்கதாகும். காஞ்சிபுரம் பொதுவாழ்வுத் துறை, ஒரு சிறந்த ஊழியரை இழந்து விட்டது எனக் கூறுவது மிகையாகாது.

அவருடைய இளமை இறப்பு அவருடைய நெருங்கிய நண்பர்களுக்கு ஆற்றொணாத் துயரைத் தரும். அவருடைய இளவல்களுக்கும், குடும்பத்தினருக்கும் எனது அனுதாபத்தையும், ஆறுதலையும் கூறிக்கொள்ளுகிறேன்.

அன்பன்,
காஞ்சி - கல்யாணசுந்தரன்

ஆராய்ச்சியின் விளைவு

அதிக வேலைகளுக்கு வாய்ப்பு

சென்னை, மே 31—

54-மணி நேரம்வரையில் போதை கொடுக்கும் தன்மை (புளிப்பு) பெறுதவகையில், நீரா' (பதனீர) பண்படுத்தும் ஒரு நவீன முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம். தற்போது, மூன்று மணி நேரத்திற்குப் பிறகு அது புளித்து வருகிறது; ஆனால 'பாலூட்ரின்' என்ற மலேரியா தடுப்பு மாத்திரையின் ஒரு பாதியை ஒரு குடம் பதனீரில் கரைத்தால் 54 மணி நேரத்திற்குப் புளிக்காமல் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுளளதாம்.

இந்த ஆராய்ச்சி பலனளிக்குமானல், இம்மாநிலத்தில் பெருமளவுக்குப் பதனீர இறக்க அனுமதியளித்து, 'உபரி' வேலைகள் தருவதற்குச் சர்க்கார் ஏற்பாடு செய்யக்கூடும் எனக் கூறப்படுகிறது.

****

'நம் நாடு'

நான்காம் ஆண்டு துவக்கவிழா மலர்

(12 பக்கங்கள்)

☆

15—6—56-ந் தேதியன்று
நாடெங்கும் கிடைக்கும்
விலை அணா 2.

☆

அண்ணா, மற்றும், கழக எழுத்தாளர் பலரும் எழுதுகின்றனர்.

****

வடநாட்டில் இரயில்வே தொழிலாளர் வேலைநிறுத்தம் நீடிக்கிறது

6,000 பேர் இன்னும் வேலைக்குத் திரும்பவில்லை

புதுடில்லி, மே 31—

வடக்குப் பிரதேச இரயில்வேயில், சுமார் 6,000 பேர்வரை இன்னும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாக இரயில்வே இலாகா அதிகாரிகளே தகவல் தந்திருக்கின்றனர்.

அம்பாலா, சகரன்பூர், கால்கா முதலிய இடங்களில் தொடர்ந்து வேலைநிறுத்தம் நடைபெறுகிறது.

மேலும், கால்கா இரயில்வே தொழிலாளர்மீது போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததை கண்டித்து, அடையாள வேலை நிறுத்தத்தில் இன்று காலை ஈடுபட்ட அமிர்தசரஸ் இரயில்வே தொழிலாளர்கள் பிற்பகல் 2-30 மணிக்கு வேலைக்குத் திரும்பியதாகவும் அதிகாரிகள் கூறியிருக்கின்றனர்.

இந்தப் பிரதேசங்களில் இன்னும் இரயில் போக்குவரத்து செம்மைப்பட்டு விடவில்லை என்றும், பல இரயில்கள் தாமதமாகப் விடப்படுகின்றன என்றும், பல இரயில்கள் வெவ்வேறு வழிகளில் திருப்பி விடப் படுகின்றன என்றும் தெரிய வருகிறது.

மாவு ஆலை தொழிலாளர் வேலை நிறுத்தம்

சென்னை, ஜூன் 1—

நான்கு தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கியதற்காக இராயபுரம் முதல் லைன் பீச்சில் உள்ள தென்னிந்திய மாவு ஆலையைச் சேர்ந்த 128 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.